**திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டம் - 2011**

---

**1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) முன்னைய ஆண்டுக்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் 2008 முதல் 2010 வரையான முன்னைய காலத்திற்கான ரூபா 1,384,340,734 ஆன செலவினத்துடன் ஒப்பிடும் போது ரூபா 799,619,910 ஆகும். 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 2,183,960,644 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே தரப்படுகின்றது.

| விடயம் | 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான செலவினம் | 2008 முதல் 2010 வரையான காலப்பகுதிக்கான செலவினம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| செயற்திட்ட முகாமைத்துவ செலவினம் இலங்கை அரசாங்கம் | 199,794,393 | 626,663,008 | 826,457,401 |
| ஆலோசனை கட்டணம் - ஏஎவ்டி | 18,585,126 | 18,536,851 | 37,121,977 |
| - ஆர்பிஈ | 55,370,426 | 107,642,098 | 163,012,524 |
| ஒப்பந்தக்காரர் கொடுப்பனவு– ஏஎவ்டி | 169,167,060 | 631,498,777 | 800,665,837 |
| - ஆர்பிஈ | 354,255,931 | - | 354,255,931 |
| பெறுமானத்தேய்வு | 2,446,974 | - | 2,446,974 |
| மொத்தம் | 799,619,910 | 1,384,340,734 | 2,183,960,644 |

### 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கில் உள்ள மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | யூரோ | ரூபா |
|---|---|---|
| 2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 304,613 | 44,949,246 |
| கூட்டுக:- | | |
| மீளளிப்புகள் | 734,086 | 117,549,769 |
| | 1,038,699 | 162,499,015 |
| கழி: பற்றுதல்கள் | 848,415 | 129,791,140 |
| | 190,284 | 32,707,875 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | (4,655,669) |
| 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 190,284 | 28,052,206 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 பெப்ரவரி 28 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டியிருந்த 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் 2013 யூலை 04 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 இல் செயலாற்றல் பிணைமுறிக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் செயற்திட்டத்தால் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 4 மில்லியன் தொகை நடைமுறைச் சொத்தின் கீழ் இது புறம்பாக காட்டப்படாமல் நிதிக் கூற்றுக்களில் நடைமுறை வேலையின் கீழ் முறையற்றரீதியில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மொத்த கடனிலிருந்து கடனளிக்கும் முகவரால் கழிக்கப்பட்ட கடன் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் என்பவற்றிலிருந்தான உரிய பகுதி மதிப்பிடப்பட்டு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை மத்திய வங்கியால் (சீபீஎஸ்எல்) பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 28 மில்லியனிற்கு சமமான யூரோ 190,284 ஆகும். இது ரூபா 73 மில்லியனிற்கு சமமான யூரோ 494,897 ஆக காட்டப்பட்டிருந்தது. எனவே, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 45 மில்லியனிற்கு சமமான யூரோ 304,612 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதக்கூற்றில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மற்றும் ஆர்பிஈ கடன் மீளாய்வாண்டின் போது அனமதிக்கப்பட்ட தவறான நாட்குறிப்புப் பதிவு காரணமாக ரூபா 19 மில்லியனிற்கு சமமான யூரோ 164,717 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஊ) நிதிக் கூற்றுக்களில் வழங்கப்பட்ட ரூபா 2.4 மில்லியன் தொகையான ஆதனம், பொறி மற்றம் உபகரணங்களிற்கான பெறுமானத்தேய்வு உரிய நிலையான சொத்துக்களின் கிரயங்களிலிருந்து கழிக்காமல் செயற்திட்டத்தின் பொறுப்பாக கணக்கிடப்பட்டிருந்தது.

(எ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் கூற்று முதலீட்டு மற்றும் நிதி நடவடிக்கைகளின் செயற்பாடுகளை புறப்பான இனங்காணாக் கூடியவாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1. நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பட்டியலிடப்பட்ட செயற்திட்ட காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்கள் எய்தலை உறுதிப்படுத்துவதற்கு மாதாந்த, காலாண்டு, அரையாண்டு போன்ற முழுச் செயற்திட்ட காலத்தில் நிர்ணயிக்கின்ற பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகள் சுட்டிக் காட்டுகின்ற விரிவான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். செயற்திட்டத்தால் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றுமும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2011 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின் போதான நிதிகளின் பயன்பாடு | 2011 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | யூரோ மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | யூரோ மில் | ரூபா மில் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 10.35 | 1,500.75 | 270.00 | 175.00 | 6.30 | 978.03 |
| ஆர்பீஈ | 12.50 | 2,062.50 | 456.00 | 307.71 | 4.64 | 718.83 |
| இலங்கை அரசாங்கம் | 6.78 | 1,087.00 | 305.00 | 196.11 | 5.20 | 834.05 |
| மொத்தம் | 29.63 | 4,650.25 | 1,031.00 | 678.82 | 16.14 | 2,530.91 |

## 4.2 பௌதீக செயலாற்றல்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் பின்வருமாறு இருந்தன.

| பொதி இல/ செயற்திட்ட நடவடிக்கை | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| | இலக்கு | எய்தல் |
| | சதவீதம் | |
| **ஜீரீஜடபிள்யூஎஸ்பி/சிவில் வேலை/2007/01**<br>கால்வாய், பம் கவுசின் நிர்மாணம் மற்றும் நீர்த் தேக்கங்களின் புனரமைப்பு | 100 | 65 |
| **ஜீரீஜடபிள்யூஎஸ்பி/ஏஎவ்டி/வால்வுவும் இரும்புக் குழாயும்/2008/01**<br>வால்புகள் உதிரிப்பாகங்கள் இரும்புக் குழாய்கள் விநியோகதிதலும் வழங்கலும் | 100 | 88 |
| **ஜீரீஜடபிள்யூஎஸ்பி/ஏஎவ்டி/டிஐ 600 குழாயிடல்/ /2007/01**<br>கந்தளாய் டபிள்யூரீபி இற்கு மகாவலி நீர்த் தேக்கத்திலிருந்து டிஐ குழாய் வழங்கலும் பொருத்துதலும் | 85 | 48 |
| **ஜீரீஜடபிள்யூஎஸ்பி/ஏஎவ்டி/பிஈ குழாயிடல்/** | | |

| | | |
|---|---|---|
| **/2008/01** | | |
| கின்னியா வழங்கல் மற்றும் இறக்க்கண்டி விரிவாக்கலிற்கான பிஈ/டிஐ குழாய் வழங்கலும் பொருத்துதலும் | 100 | 92 |
| **ஜீரீஜடபிள்யூஎஸ்பி/ஏஎவ்டி/கின்னியா கோபுரம்/2008/01** | | |
| கின்னயாவில் தண்ணீர் கோபுர நிர்மாணம் | 100 | 92 |
| **ஜீரீஜடபிள்யூஎஸ்பி/ஆலோசனை/பிரென்ஸ்/ ஏஎவ்டி /2007/03** | | |
| ஈச்சலம்பற்று மற்றும் புல்மோட்டை நீர் வழங்கல் திட்டத்திற்கான ஆலோசனை கற்கைகள் | 80 | 35 |
| **ஜீரீஜடபிள்யூஎஸ்பி/ஆர்பிஈ/திறவுகோல் வேலை/ /2008/01** | | |
| கந்தளாய் டபிள்யூரிபி இன் புனரமைப்பும் தரமுயர்த்தலும் | 80 | 39 |
| **ஜீரீஜடபிள்யூஎஸ்பி/ஆர்பிஈ/திறவுகோல் வேலை/ ஈ&எம்/2008/01** | | |
| மின்சார இயந்திர உபகரணங்களின் புனரமைப்பிற்கான திறவுகோல் ஒப்பந்தம் (ஆர்பிஈ) | 80 | 39 |
| **ஜீரீஜடபிள்யூஎஸ்பி/ஆலோசனை/பிரென்ஸ்//2005/01** | | |
| செயற்திட்ட அமுலாக்கலிற்காக பொறியியல் சேவைகள் களப் புலனாய்வு | 90 | 74 |